**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**அ.வ.எண்.262/2023**

**(TNDG07-0000727-2023)**

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் அஞ்சல், சொரியங்கிணத்துப்பாளையம், மூர்த்தி டெக்ஸ், கதவிலக்கம் 21-ல் வசித்து வரும் சக்கரைவேல் கவுண்டர் என்பவரின் மகளும், மூர்த்தி என்பவரின் மனைவியுமான சுமார் 41 வயதுள்ள திருமதி.சுதா.

--- வாதி

// எதிர் //

1. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மேல்கரைப்பட்டி கிராமம், கதவிலக்கம் வசித்து வரும் சக்கரைவேல் கவுண்டர் என்பவரின் மனைவி சுமார் 70 வயதுள்ள திருமதி.அங்காத்தாள்.
2. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மேல்கரைப்பட்டி கிராமம், கதவிலக்கம் வசித்து வரும் சக்கரைவேல் கவுண்டர் என்பவரின் மகன் சுமார் 50 வயதுள்ள திரு.துரைச்சாமி.
3. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மேல்கரைப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் சுப்பிரமணி என்பவரின் மனைவி சுமார் 75 வயதுள்ள திருமதி.வஞ்சாத்தாள் (இறப்பு).
4. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மேல்கரைப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் லேட்.கந்தசாமி கவுண்டர் என்பவரின் மகன் சுமார் 60 வயதுள்ள திரு.ராமசாமி.
5. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மேல்கரைப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் கருப்பண கவுண்டர் என்பவரின் மகன் சுமார் 80 வயதுள்ள திரு.சுப்பிரமணியன்.
6. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மேல்கரைப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் நாச்சிமுத்து கவுண்டர் என்பவரின் மகன் சுமார் 78 வயதுள்ள திரு.சுப்பிரமணி.
7. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மேல்கரைப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் சுப்பிரமணி என்பவரின் மகளும், பாலாமணி என்பவரின் மனைவியுமான சுமார் 41 வயதுள்ள திருமதி.கவிதா.
8. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மேல்கரைப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் சுப்பிரமணி என்பவரின் மகளும், S.K.பெரியசாமி என்பவரின் மனைவியுமான சுமார் 41 வயதுள்ள திருமதி.சசிகலா.

--- பிரதிவாதிகள்

(இ.ம.எண்.2/2024-ல் கடந்த 08.08.2024ஆம் தேதிய உத்தரவின்படி 6 முதல் 8 பிரதிவாதிகள் இறந்துபோன 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்)
(இ.ம.எண்.5/2024-ல் கடந்த 24.09.2024ம் தேதிய உத்தரவின்படி பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

வழக்குச் சொத்துக்களில் வாதிக்குரிய 1/18 பாகச் சொத்துக்களை பிரதிவாதிகள் நலந்திகுடு பார்த்து, கூட்டுச் சுவாதீனத்தில் இருந்து பிரித்து வாதிக்கு தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், தவறும்பட்சத்தில், நீதிமன்ற ஆணையர் மூலம் வழக்குச் சொத்துக்களை 18 சம பாகங்களாகப் பிரித்து, அதில் ஒரு பாகத்தை வாதிக்கு வழங்குவதன் மூலம் இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், கடந்த 27.12.2000ஆம் நாள் பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்ட பாப்பிரிவினை பத்திரம் சட்டப்படி இல்லாநிலையது (Null and void) என விளம்புகை செய்யும்படி கோாயும், வழக்குச் சொத்துக்களை பிரதிவாதிகள் வேறு நபர்களுக்கு கிரையம், ஒத்தி, ஈடு போன்ற பந்தக பராதீனங்களுக்கு உட்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கும்படி கோரியும், வழக்கு செலவு தொகையினை வாதிக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மதிப்பு விபரம் :–</u>** வழக்குச் சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ.45,11,862/–. அதில் வாதிக்குரிய 1/18 பாகச் சொத்தின் மதிப்பு ரூ.2,50,659/–. அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.5000/– பிரிவு 37(2)–ன்படி கட்டப்பட்டுள்ளது.

27.12.2000ம் நாளிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சட்டப்படி இல்லாநிலையது என விளம்புகை செய்யக்கோரும் பரிகாரத்திற்கு வாதியின் தாவா மதிப்பு ரூ.5000/–. அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.150/– பிரிவு 25(டி)–ன்படி கட்டப்பட்டுள்ளது.

வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரத்திற்கு வாதியின் தாவா மதிப்பு ரூ.1000/–. அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.30/– பிரிவு 27(சி)–ன்படி கட்டப்பட்டுள்ளது.

தாவா மொத்த மதிப்பு ரூ.2,50,659+ரூ.5000+ரூ.1000=ரூ.2,56,659/–. மொத்த நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.5,000+ரூ.150+ரூ.30=ரூ.5,180/–.

வழக்குமூலம் : 27.12.2000 பழனி வட்டம், மேல்கரைப்பட்டி மற்றும் கோட்டத்துரை கிராமங்களில் உற்பத்தி.

வழக்கு தாக்கல் செய்த நாள் : 13.07.2023 மற்றும் 12.09.2023

இவ்வழக்கானது கடந்த 13.09.2023ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்த இந்த வழக்கில் என் முன்பாக வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S.ஜெயராமன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் P.சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், பின்னர் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும் ஒருதலைப்பட்சமாகக் கருதப்பட்டும், 4, 6, 7, 8 பிரதிவாதிகள் அழைக்கப்பட்டு ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டும், 5ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் K.பூபதி மற்றும் K.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையாகியும், 3ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், தாவா பிராதை நிராகரிக்கும்படி கோரி 5–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.8/2025 மனுவானது இன்று அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்பாணை

1. தாவா பிராதை நிராகரிக்கும்படி கோரி பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.8/2025 மனுவானது அனுமதிக்கப்பட்டது.
2. எனவே, இவ்வழக்கின் பிராது நிராகரிக்கப்படுகிறது.
3. செலவு தொகை பற்றிய உத்தரவு இல்லை.

## சொத்து விபரம்

**அயிட்டம் – I :**

திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், கீரனூர் சார்பதிவகம், பழனி வட்டம், மேல்கரைப்பட்டி கிராமம்,

| வ.எண். | பட்டா எண். | சர்வேஎண். | ஹெக்டேர்ஸ் | அரசு வழிகாட்டி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1. | | 62/4C | 1.62.5 | ரூ. 6,32,937–00 |
| 2. | | 45/2G | 0.06.0 | ரூ. 23,370–00 |
| 3. | | 45/2C | 0.22.5 | ரூ. 87,637–00 |
| 4 | | 45/2D | 0.21.5 | ரூ. 83,742–00 |
| 5. | | 45/2E | 0.22.5 | ரூ. 87,637–00 |
| 6. | 633 | 14/1 | 0.03.0 | ரூ. 1,243–00 |
| 7. | 1649 | 15/1A | 0.20.0 | ரூ. 82,745–00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | 1649 | 15/1D | 0.12.50 | ரூ. 51,812–00 |
| 9. | 1648 | 14/2 | 0.48.00 | ரூ. 1,98,960–00 |
| 10. | 1648 | 45/2E | 0.22.00 | ரூ. 85,690–00 |
| 11. | 800 | 62/4C | 1.62.50 | ரூ. 6,32,937–00 |
| 12. | 814 | 45/2G | 0.06.00 | ரூ. 2,337–00 |
| 13. | 916 | 42/2H | 0.09.00 | ரூ. 3,505–00 |
| | | | மொத்தம் | ரூ.19,74,552–00 |

மேற்படி சொத்துக்களும், சர்வே எண்.45/2H–ல் உள்ள தூர்ந்துபோன பழைய சிகஸ்து கிணறும் அதற்கு ஏற்பட்ட சகல மாமூல் பாத்தியங்களும் சேர்ந்து.

<u>அயிட்டம் –II:</u>

திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், கீரனூர் சார்பதிவகம், பழனி வட்டம், கோட்டத்துரை கிராமம்,

| வ.எண். | பட்டா எண். | சர்வேஎண். | ஹெக்டேர்ஸ் | அரசு வழிகாட்டி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1. | 433 | 166/1 | 5.99.50 | ரூ.14,92,755–00 |
| 2. | 531 | 167 | 1.59.00 | ரூ. 3,95,910–00 |
| 3. | 432 | 168 | 2.60.50 | ரூ. 6,48,645–00 |
| | | | மொத்தம் | ரூ.25,37,310–00 |

-----

2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் நாளிட்ட தீர்ப்பாணையில் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.24 18:33:54 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.

**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**அ.வ.எண்.262/2023**

**திருமதி.சுதா – வாதி**

**எதிர்**

**திருமதி.அங்காத்தாள் மற்றும் ஏழு நபர்கள் – பிரதிவாதிகள்**

**<u>மதிப்பு ச் சீட்டு</u>**

| | | |
|---|---|---|
| 1. | வழக்கின் தன்மை | : பாகப்பிரிவினை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரங்கள் |
| 2. | சட்டப்பிரிவு | : 37(2), 25(டி) மற்றும் 27(சி) |
| 3. | வழக்கின் மதிப்பு | : ரூ.2,50,659+ரூ.5000+ரூ.1000=ரூ.2,56,659/–. |
| 4. | நீதிமன்ற கட்டணம் | : ரூ.5,000+ரூ.150+ரூ.30=ரூ.5,180/– செலுத்தப்பட்டுள்ளது. |

உத்தரவுப்படி
Sd/–K.Gurumani
தலைமை எழுத்தர்
கூடுதல் சார்பு நீதிமன்றம்,
பழனி.